# “பண்ணாராய்ச்சி வித்தகர்”

குடந்தை ப. சுந்தரேசனார்.

- கட்டுரை: தொகுப்பாளர். முனைவர் பொன்.முத்தையன் திருவிடைமருதூர்.

உலக மொழிகள் பல. அவைகளுள் ‘ உயர்தனிச் செம்மொழி என்ற சிறப்பிற்குறியான சிலவே. அவற்றுள்ளும் குறிப்பிடத்தக்க நம்முடைய செந்தமிழ்மொழி காலப் பழமையும் கருத்துவளமான இலக்கணக் கட்டுக் கோப்பும் இலக்கியச் செழுமையும் கொண்ட மொழி தமிழ்மொழி. எம்மொழிக்கும் இல்லாத இனிய தனிய பெருமையாம் முத்தமிழ் எனும் பாகுபாடு உடைய மொழி. இயல், இசை, நாடகம், எனும் மூன்றில் நடுவணதாகிய இசையின் சிறப்பினை முன்னெடுத்துப் பின்னர் அவ்விசையின் பயன் தந்த பெருமகனாம் பண்ணிசைவித்தகர், குடந்தை ப.சுந்தரேசனாரின் சிறப்புக்களைக் காண்பதே இக் கட்டுரையின் நோக்கம்.

**இசையின் மேன்மை:**

“இசை என்னும் சொல் இசைவிப்பது, தன்வயப்படுத்துவது எனப் பொருள்படும். இசை கல்மனத்தையும் கரைந்துருகச் செய்யும் பெற்றிவாய்ந்தது. கற்றோரும் மற்றோரும் இசையின் வயப்பட்டே நிற்பர். அன்பைப் பெருக்கி பண்பை வளர்ப்பது இசை, இசையைக் கேட்டு இன்புறாத உயிர்கள் இல்லையென்றே கூறலாம். இசைவயப்படாதார் அன்பின் வயப்படார் என்றே கூறுவது அமையும். இசையின் அருமையையும் பெருமையையும் சார்ந்தே தமிழர் இசைத் தமிழை முத்தமிழுள் நடு நாயகமாக வைத்துள்ளனர்.

**இசைத்தமிழ்:**

'இசைத்தமிழ்' என்பது பண்ணேடு கலந்தும், தாளத்தோடு கூடியும் இயங்கும், செந்தமிழ்ப் பாடல்களால். இயன்ற இலக்கியங்களும் அவற்றின் இலக்கணங்களும் அடங்கிய நூல்களின் தொகுதி' என்பர். பழந்தமிழ் நூல்களில் பெரும்பாலானவை செய்யுள் வடிவில் அமைந்தவையே. பிற்காலக் கல்வெட்டுக்களிலும் பல செய்யுள் மெய்க்கீர்த்திகளாக அமைந்துள்ளன. சங்க இலக்கியம் முதலாக, பதினெட்டாம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் இசைத்தமிழ் நூல்களேமிக்கிருந்தன எனலாம்.

**தமிழ்ப்பண்கள்:**

குரல் துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன ஏழுவகை தமிழ்ப்பண்கள் இவற்றிலிருந்து பிறப்பன பண்களின் தாளங்கள். தமிழ்ப்பண்கள் , குறிஞ்சிப்பண், பாலைப் பண், முல்லைப்பண், மருதப்பண், நெய்தற்பண் என்று பெரும்பண்கள் ஐந்து, இவற்றின் வகைகள் பல. அவற்றுள் பகற்பண், இரவுப்பண்கள் காலை மாலை பண்கள், என அவ்வப்பொழுதிற் சமைந்த பண்களும் வழக்கிலிருந்தன.

**இசை நூல்கள்:**

தொன்மைத்தமிழில் பெருநாரை, பெருங்குருகு, இசைநுணக்கம், தாளவகையோத்து முதலான இசைத்தமிழ் நூல்கள் இருந்தன. பிற்காலத்தில் கந்தபுராணக் கீர்த்தனை பெரியபுராணக் கீர்த்தனை சந்திரிகை முதலான இசைத் தமிழ்நூல்கள் தோன்றின.ஆனால் இந்த இசைத் தமிழ்வளர்ச்சி சங்க காலத்தில் சிறப்பாக வளர்ந்து களப்பிரா ஆட்சியில் சுமார் 300 ஆண்டுகள் வீழ்ந்து, தளர்ந்து மங்கிப்போயின. பல்லவர் காலத்திற்கு பின் மீண்டும் இசைத் தமிழில் புதிய மலர்ச்சி வந்தது.

இக்காலகட்டத்தில் தமிழ் நாடெங்கும் பக்தி இலக்கிய வளர்ச்சி வெள்ளமாகப்பெருகியது. நாயன்மார்களும் ஆழ்வார்களும் இசைத்

தமிழினால் இறையுணர் வினை மக்களுக்கு ஊட்டினர். எனினும் இக்காலத்திலேயே, சமணர்களின் செல்வாக்கால் ‘இசைதரும் இன்பம் தீது’ என்ற பிரச்சாரமும் ஓங்கி வளர்ந்தது உண்மை. இதனால் சற்று தடைப்பட்ட தமிழிசை பின்னர் வட மொழியின் செல்வாக்கால் மீண்டும் வளர்ந்தது. மன்னர்கள் உதவினர். மேளகர்த்தாக்கள் தோன்றின.

**மராட்டியர் வளர்த்த இசை:**

மராட்டிய மன்னர்கள் காலத்தில் தமிழிசை நன்கு செழித்தன. வளர்ந்தது, சங்கீதம். ஆனாலும், பொதுமக்கள் சாகித்யத்தினையே விரும்பினர். சத்குரு தியாகராசர் போன்றோர். படைத்த சங்கீத உபாசனை வெகு மக்களைகவர மொழிதடையாக இருந்தது. பொருள் புரியாத பாடல்களை சங்கீதத்திற்காக மட்டும் சுவைப்போர் குறைந்தனர். மக்களுக்குப்புரியும் வகையில் தாய்மொழியாம் தமிழில் இசைப் பயிர் வளர்வதற்கான சூழல் கனிந்தது. பல அறிஞர்கள் இது பற்றி உணர்ந்து பாடுபட்டனர். தமிழிசைக்கு முதன்மை தரப்பட்டது.

**இசைத் தமிழ்வளர்த்த சான்றோர்கள்:**

19 - ஆம் நூற்றாண்டில் தமிழிசை வளர்ச்சி மேன்மையடைய பலர் பாடுபட்டனர். இவர்களில் ராசா சர். அண்ணாமலை செட்டியார், R.K. சண்முகம் செட்டியார், M.M.தண்டபாணி தேசிகர், அனந்த பாரதி, சுப்புராமையர், கோபால கிருஷ்ண பாரதியார், வேத நாயகம் பிள்ளை சுத்தானந்த பாரதியார், பாபநாசம் சிவன் மதுர பாஸ்கரதாஸ், கே.பி. சுந்தராம்பாள், சீர்காழி கோவிந்தராசன், தூரன், அருணாசலக்கவிராயர், முத்துத்தாண்டவர், ஆபிரகாம் பண்டிதர் மற்றும் பலர்.

**பண்ணிசை வித்தகர்:**

தமிழ்நாட்டில் தமிழிசையின் மேன்மைக்கும், வளர்ச்சிக்கும், புதுமைக்கும் முன்னின்று பாடுபட்டவர்களில் ப.சுந்தரேசனார் குறிப்பிடத்தக்கவராக உள்ளார். ‘பண்ணராய்ச்சி வித்தகர், ‘ஏழிசைத் தலைமகன்’ ‘திருமுறைச் செல்வர்’ என்றெல்லாம் பலவாறு

பாராட்டப்பட்டவர் ப.சுந்தரேசனார். இவர் தமிழிசையின் தவப்புதல்வர்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவர். சுயம்புவாகத் தோன்றிய சுடர் இசை விளக்கு எனலாம்.

**இளமையும் இல்லறமும்:**

ப.சுந்தரேசனார், தஞ்சை மாவட்டம் கும்பகோணத்தில் பஞ்சநதம்பிள்ளை குப்பம்மாள் தம்பதியரின் மகனாக 25-05-1914இல் பிறந்தார். இவர் தாயார். ஊர் சிர்காழில்இவர் பிறந்தார். வறுமை காரணமாக இவரால் நான்காம். வகுப்பிற்கு மேல் கல்வி கற்க இயலவில்லை. நகைக்கடை ஒன்றில் சிறுபணியில் இவரைப் பெற்றோர் சேர்த்துவிட்டனர்.

பள்ளியில் கல்வி பெற இயலவில்லை எனினும் சுந்தரேசனார் மனம்தளரவில்லை. தாமே முயன்று பல நூல்களைக் கற்று மேம்படலானார். இசைத் தட்டுகளைக் கற்று கேட்டுக்கேட்டுத்தம் இசையறிவினை வளர்த்துக் கொண்டார். தஞ்சை ஆபிராகாம் பண்டிதரின் கருணாமிர்தசாகரம், பேராசிரியர் சாம்பமூர்த்தியின் இசைநூல்கள் போல்வன சுந்தரேசனாருடைய இளமைக்கால இசையார்வத்திற்கு அடியுரமாக அமைந்தன. தம்மை நன்கு தகுதிப்படுத்திக் கொண்டார்.

அக்காலத்தில் திருவனந்தபுரத்தில் இருந்த இலக்குவணபிள்ளை என்பாரிடம் சென்று தம் ஆர்வத்தினைச் சொல்லி, அவர்பால் இசை கற்க வேண்டினார். ஆனால் அங்கு தங்க இயலாமையைக் காட்டி, இலக்குவணபிள்ளை இவரைக் குடந்தைக்கே அனுப்பிவைத்தார்.

ப.சுந்தரேசனார், முதலில் பிடில் கந்தசாமி தேசிகர் என்பவரிடம் இசைகற்றார். பின்னர் வேப்பத்துர் பாலசுப்ரமணியன் என்பவரிடம் இசை பயின்றார். 1935 முதல் சுமார் 17 ஆண்டுகளுக்கும் மேலாக, அன்று குடந்தையில் வாழ்ந்த வேதாரண்யம் இராமச்சந்திரன் அவர்களிடம் செவ்விசை பயின்றார்.

1944இல் சொர்ணம்மாள் என்பாரை மணந்தார். இவர்களின் இனிய இல்லறப்பயனாக 1947இல் மகவொன்று பிறந்தது. ஆயினும் பின்னர் அது இறந்தது. பின்னர் இவர்களுக்கு மகப்பேறு வாய்க்கவில்லை.

**ப.சுந்தரேசனாரின் இசையறிவு:**

ஒருவனுடைய வளர்ச்சிக்கும், அறிவுவளர்ச்சிக்கும், மேன்மைக்கும் அவர் வாழ்கின்ற கால, இடச் சூழல் முக்கிய காரணம் என்பதை அனைவரும் ஏற்பார்கள். அவ்வகையின் ப.சுந்தரேசனாரின் வளர்ச்சி மேன்மையில் அவர் வாழ்ந்த குடந்தை சூழல் சிறப்பான காரணமாக அமைந்தது. ப.சுந்தரேசனார், கும்பகோணத்தில் வாழ்ந்த பேட்டை நாணயக்காரத் தெருவில் வாழ்ந்த பலரும், சைவ சமயச் சார்பும், இசையறிவும் பெற்றவர்களாக இருந்தனர். சுந்தரேசனாருடைய இசையறிவு மேன்மைக்கு இதுதக்க காரணமாக அமைந்தது. மேலும் இவர் வீட்டருகே அமைந்திருந்த தேவார பாட சாலை, தமிழிசைசார்புடைய திருமடத்துத் துறவியர்கள் கூட்டுறவு, இவை இவருக்கு தமிழ்த்தவிர தெலுங்கு, வடமொழி, இந்தி மொழியறிவுபெற உதவியாக இருந்தது சிலப்பதிகாரம், சைவத் திருமுறைகள், பெரியபுராணம், சிற்றிலக்கியங்கள் இவைகளில் இவர் நன்கு தேர்ச்சி பெற்றார்.

இந்நூல்களின் பாடல்களை, இவரது குரலிசையில் கேட்டுப்பலர் இன்புற்றனர். அறிஞர்கள், அன்பர்கள் பலர், வேண்டுகோளை ஏற்று, சுந்தரேசனார், பல ஊர்களுக்குப் சென்று சிலப்பதிகாரம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், முதலான இலக்கியங்களின் பாடல்களைப் பாடியும், விரிவுரை செய்தும், அவைகளில் அமைந்துள்ள இசை மேன்மை முதலான கருத்துவளங்களை எடுத்துக்கூறி இன்புறச் செய்தார். தேவாரங்களில் அமைந்துள்ள பண்முறைகள், பண்அமைதி, பண்ணின்பம், கருத்துவளம், இவைகளைத்தம் குரலிசைவழியே சுந்தரேசனார், நன்கு ஏடுத்துரைத்து, வல்லவரானர். இவர் பேச்சை பாடுவதைக் கேட்கவே அன்று பலர் தவம் கிடந்தனர் எனலாம். தம்குரல் வளத்தில், குமரகுருபரரின் தொடுக்குங்கடவுட் பழம் பாடல்,

என்ற பாடலையும், சிலம்பின் கானல்வரியில் இடம் பெறும், 'திங்கள் பாலை வெண்குடையின்' என்ற வரிப்பாடலையும், இன்ன பிற இசைப்பாடல்களையும் இவர் பாடிக்கேட்டவர்கள் இசையின்பக் கடலில் திளைத்தனர், என்பதே உண்மை. சில ஆண்டுகள் இவர் தொடர்ந்து தமிழகத்தின் பல கல்லூரிகளில் மாணவ, மாணவியர், ஆசிரியர்களை கிறங்க வைத்தார். கும்பகோணம் கல்லுரியில் தமிழ்விழாவில் இவர் இசைத்த கானல் வரிப்பாடல் சிறப்பாக அமைந்தது.

**சுந்தரேசனாருடைய பணி:**

ப.சுந்தரேசனார், 1949 முதல் 1952 வரை, திருவையாறு அரசர் கல்லூரியில் புலவர் வகுப்பிற்கு இசை ஆசிரியராக இருந்தார். 1952 முதல் 1955 வரை, அண்ணா மலைப்பல் கலைக் கழகத்தில் தேவார இசை விரிவுரையாளராகவும் இவர் பணிபுரிந்துள்ளார்.

**அறிஞர்கள் தலைவர்கள் பாராட்டு:**

திறமான இசைப்புலமையாளராகிய ப.சுந்தரேசனாரை, அன்று அறிஞர்கள் பலர் பாராட்டினர். அருட்செல்வர் நா.மகாலிங்கனார் அவர்கள், நீதியரசர் செங்கோட்டு வேலனார், முதலானோர், சுந்தரேசனாருடைய, இசைக்கு இசையில் மயங்கி பாராட்டியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். அன்றைய தமிழக முதல்வர் அவர்கள், உலக தமிழ் மாநாட்டில், ப.சுந்தரேசனாருடைய பண்ணிசைத் திறனை நேரில் கேட்டு வியந்து பாராட்டினர். முன்னாள் முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் சுந்தரேசனாருடைய திறனைப் பாராட்டி, இவர்தம் பணிவிழாவிற்கு வாழ்த்தியுள்ளார். மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தில் அன்று துணைவேந்தராக இருந்த மூதறிஞர் முனைவர் வசுப.மாணிக்கனார் அவர்கள் இவரது இசைபுலமையினை உணர்ந்து, சிலகாலம் அப்பல்கலையில் தமிழிசை ஆய்வில் பணியமர்த்திப் பாராட்டினார்.

**இசைவாரிசுகள்:**

அமரர் குடந்தை கதிர் தமிழ்வாணன் அவர்கள் ப.சுந்தரேசனாரினை பெருமைகளை விதந்தோதிய நாவலராவார். இன்று நம்மிடையே வாழ்கின்ற திருவாளர்கள் கோடிலிங்கம் வைத்தியலிங்கம் சகோதார்கள், சுந்தரேசனாரின் பணியைப் பாராட்டியுள்ளனர்.

**ப.சுந்தரேசனாரின் தமிழ்க்கொடை:**

1.இசைத் தமிழ்ப் பயிற்சிநூல் (1971)
2.முதல் ஐந்திசைப்பண்கள் (1956) பாரிநிலையம்
3.முதல் ஐந்திசை நிரல்
4.முதல் ஆறிசை நிரல்
5.முதல் ஏழிசை நிரல்

**தொடர்கட்டுரைகள்:**

1.நித்திலம்
2.காவியங்களில் இசை நாடகம்
3.இசைத்தமிழ் நுணுக்கம்

**பதிப்பித்த நூல்கள்:**

பஞ்ச மரபு (இசை நூல்)

**ப.சுந்தரேசனார் நூற்றாண்டு விழா:**

தஞ்சை தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் ப.சுந்தரேசனாரின் நூற்றாண்டு விழா 12-08-14 இல் சிறப்பாக நடைபெற்றது. வட அமெரிக்க தமிழ்ச் சங்கம் பேரவையின் 27வது தமிழ் விழா ராபர்ட் கால்டுவெல் நூற்றாண்டு விழா வாகவும், பண்ணாராய்ச்சி வித்தகர் ப.சுந்தரேசனாருடைய நூற்றாண்டு விழாவாகவும் கொண்டாப்பட்டது . இவ்விழாவின் மையக் கருத்தாக தமிழ் அடையாளம் காப்போம், ஒன்றிணைந்து உயர்வோம்’ என்பதாக

அமைந்தது. செயின்ட்லூயிஸ் வளாகத்தில் கொண்டாடப்பட்டது. தமிழகத்தில், (லால்குடியில்) ப.சுந்தரேசனாரின் நூற்றாண்டு இல்விழா 28-5-14 காலை 9 முதல் இரவு 8 மணிவரை கொண்டாடப்பட்டது. லால்குடி சிவன் கோயிலில் நடைபெற்ற இவ் விழாவில் தலைமையேற்றவர் புலவர் மாமணி அம்மாபேட்டை தமிழச்சேரனார் அவர்கள். ப.சுந்தரேசனாரின் படத்தினைத் திறந்து வைத்தவர் முதுபெரும் புலவர் ப.ஆபிராகாம் அவர்கள். விழா தலைமையேற்று நடத்தியவர் முனைவர் மு.இளங்கோவன் ஆவார். இவர் தான் தொடர்ந்து ப.சுந்தரேசனாரின் இன்ப பயணம் பற்றித் தொடர்ந்து ஆய்ந்து எழுதிவருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. பேரா. சுப.வீரபாண்டியன் அவர்கள் 2014 இல் கலைஞர் தொலைக்காட்சியில் ப.சுந்தரேசனாரின் நூற்றாண்டு பற்றியும், அன்னாருடைய அருமை பெருமைகள் பற்றியும் உரையாற்றியுள்ளார். உலக நாடுகளில் ப.சுந்தரேசனாரின் பெருமைகளைப் பலர் கொண்டப்படும் போது தமிழகத்தில் பலர் அந்நினைவே இல்லாமலிருப்பது வேதனைக் குறியது என்று குறிப்பிட்டுள்ளார்.மேலும், ப.சுந்தரேசனாரின் மறைவிற்கு பெருஞ்சித்திரனார் அளித்த இரங்கற்பாவினையும் நினைவுகூர்ந்துள்ளார்.

சுயம்புவாக இருந்து தமிழிசைக்குத் தொண்டு செய்துள்ள தலைமகன் ப.சுந்தரேசனாருடைய அருமையான பல உரைகள் காற்றில் கரைந்துவிட்டது தமிழர்களின் தவக்குறைவே. மேலும் ஏழேழ் பாலை, இரண்டாம் ஐந்திசைநிரல், பரிபாடல் இசைமுறை, பாணர்கள் பயிற்றுவித்த இசைமுறை, இசைத்தமிழ் பயிற்சிநூல்,இசைத்தமிழ் அகர நிரல், வேனிற்காதை இசைப் பகுதி விளக்கம், சேக்கிழார் கண்ட இசைத்தமிழ், சமய குரவர்கள் கண்ட இசைத்தமிழ், பெரும்பண்கள் பதினாறு, 103 பண்கள், தாளநூல்கள், ஒன்று முதல்6 வரை, கடித இலக்கிய இசைத்தமிழ்க் குறிப்புகள், இசைத்தமிழ் தமிழிசைப்பாடல்கள், இசைத்தமிழ் வரலாறு முதலான இவர் தம் பணி சிறப்புடையது.

**தமிழிசை குறித்த, ப.சுந்தரேசனாரின் முடிவுகள்:**

1. தமிழ்மக்கள் இசையை உணர்ந்தது குழற்கருவிகள் வழியேயாகும்
2. முல்லைநில மக்களே குழற்கருவிகளையும் யாழ்க்கருவிகளையும் கண்டுபிடித்தனர்.
3. முதலில் குழற்கருவி ஐந்து துளைகளைக் கொண்டிருந்தது. அதுபோல் யாழும் ஐந்து நரம்புகளைக் கொண்டிருந்தது.
4. ஐந்து துளைகளின் வழியாக எழுந்த ஐந்து இசைகளே ஆதி இசையாகும்.
5. குழற்கருவி முந்தியது எனினும், யாழ்க் கருவியின் வாயிலாகவே இசை வளர்ச்சியுற்றது.
6. முதல் ஐந்திசைப்பண்ணின் இசைநிரல் முதலியன1.தாரம் 2.குரல் 3.துத்தம் 4.உழை 5.இளி என்பன.
7. முதல் பண்ணாகிய தாரம் என்பது ஆசான் எனவும், ஆசான்திறம் எனவும் காந்தாரம் எனவும் பல பெயர்களில் வழங்கின, இன்று அது மோகனம் எனப்படுகிறது.
8. இரண்டாவது பண் ‘குரல்’ என்பதாம், இது முன்பு செந்நிறம், செந்துருதி, செந்துருத்தி, எனவழங்கப்பட்டு இன்று மத்திய மாவதி எனப்படுகிறது.
9. மூன்றாவதாகிய துத்தப்பண், முன்பு உடுகு என்று இருந்தது தற்போது இந்தோளம் எனப்படுகிறது.
10. நான்காம் பண்ணாகிய ‘உழைப்பண்’ முன்பு சாதாளி எனப்பட்டது. இப்போது அது ‘சுத்தகாவேரி’ எனப்படுகிறது.
11. ஐந்தாம் பண்ணாகிய இளிப்பண், பண்டு தனாசி என்றிருந்தது தற்போது ‘சுத்ததன்யாசி’ என்றழைக்கப்படுகிறது.

12.தென்னிந்திய இசைக்கு அடிப்படையான இசை, பழந்த தமிழகத்தில் வழங்கப்பட்ட இசையாகும்.

13. பழைய பண்முறைகள் இன்றளவும் தமிழ்நாட்டி தேவாரங்களிலும், திருவாய் மொழிகளிலும், மற்றும் பிற திருமுறைகளிலும் உள்ளன.

**நிறைவுரை:**

தமிழிசை அளப்பரும் கடல் போன்றது. சங்ககாலம் முதல் இன்று வரை தொடர்ந்து வரும் அதன் வளர்ச்சியில் தடைகள் பல அவ்வப்போது வந்தாலும் தடைகடந்து வளர்ந்து சிறந்து வருகிறது. தமிழிசை வளர்ச்சியில் தனிமனிதர்கள், நிறுவனங்களான திருமடங்கள், மன்னர்கள், அமைப்புகள் இவைகளின் பங்களிப்பு சிறப்பானது. பண்ணிசைவித்தகர் ப.சுந்தரேசனார், குடந்தையில் வாழ்நாளெல்லாம் வாடகை வீட்டில் இருந்து தமிழிசை வளர்த்து வந்தார். மஞ்சள் காமாலை என்றயெரில் அவரைக்காலன் கவர்ந்து சென்றான். எனினும் தமிழிசை உள்ளவரை, தமிழார் வலர்களின் உள்ளங்களில் அவர் என்றும் நிறைந்திருப்பார்.

**நன்றி.**

**கட்டுரையாக்கத்திற்குப் பயன்பட்டலை:**


1.தமிழகக் கலைகள் - மா. இராச மாணிக்கனார், பாரி நிலையம், 1959 சென்னை.

2.தமிழ் இலக்கிய வரலாறு ஒரு.புதுப்பார்வை - முனைவர் தி. அரங்கநாதன், தேவன் பதிப்பகம், திருவானைக்கா

3.முனைவர் மு. இளங்கோவன் - தமிழ்விக்கிப்பீடியா 20-Oct-2013. பண்ணாராய்ச்சி வித்தகர் குடந்தை ப.சுந்தரேசனார் நூற்றாண்டு விழா.

4.வட அமெரிக்க தமிழ் சங்கம் பேரவையின் தமிழ்விழா - தினகரன் 14.7.14.

5.பேரா. சுப.வீரபாண்டியன் வரை - கலைஞர் தொலைக்காட்சி 14-07-2014.

6. சிறப்பாக பயன்பட்டது http://tamil./oneindia.com/art-culture/ssays/kudanthai-p-sundaresanar-centenary-be-celeberated.185667.html.

7. சிவகுருநாதன் செந்தமிழ் சரிதம் கும்பகோணம்:


**கட்டுரை தொகுப்பாளர்:**


பேரா.முனைவர் பொன்.முத்தயன் திருவிடைமருதூர்.

நாள்: 16-04-2017 செல்: 9894791286.